# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 28 வெள்ளிக்கிழமை 11.07.2025 கதிர் 251




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel


# வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 9 ஏ

யாழ்ப்பாணம், ஜூலை 11

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 120 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

36 மாணவர்கள் 8 பாடங்களிலும், 25 மாணவர்கள் 7 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 265 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.



## இந்த வருடம் இதுவரை 37 பேர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 11

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிள் இருந்து ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 66 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களினால் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 37 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 48 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் சுமார் ஐந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களும் போதைப்பொருள் கடத்தல் காரர்களுமான "குடு சலிந்து" மற்றும் "பாணந்துறை நிலங்க" ஆகியோருக்கு இடையிலான தகராறு

7➤

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் போராட்டம்

## ஜூலை 26 இல் ஒன்றிணையுமாறு சமூக இயக்கம் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 11

சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள அனைவரையும் ஒன்றிணையுமாறு வடக்கு - கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா பாதிக்கப்பட்ட உறவுகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புக்கள, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஊடகவியலாளர்கள் என அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் மனித குலத்துக்கு திராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ் நிலைக்கு தமிழ் மக்களாகிய நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கை தொடர்பான விடயம் ஐ. நா. மனித உரிமை பேரவையில் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப்புது தீர்மானங்கள் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றது. இற்றை வரை இதுதீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைத்ததில்லை.

இவ்வாறாணதொரு சூழ்நிலையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தாணிகரின் வருகை பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எமது தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கக் கூடிய ஆரோக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை இட்டு வருத்தப்படுகின் றோம்.


அத்துடன் அண்மையில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதியால் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய ஊடக நேர்காணல் கூட எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்குரிய பொறிமுறையாக அமையாத நிலையை நாங்கள் ஊடக செய்திகள் ஊடாகப் பார்க்கின்றோம்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அமையப் போவதில்லை மாறாக சர்வதேச பொறிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதனை வலியுத்தி பல தடவைகள் இலங்கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரி வருகின்றோம்.

இந் நிலையில் ஐ. நா இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு

7➤

## மின் கம்பத்தில் ஏறி போராடிய இளைஞர்



கொழும்பு, ஜூலை 11

கொழும்பு - கோட்டை ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்துக்கு முன்பாக உள்ள மின் கம்பத்தில் ஏறி இளைஞர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த நபர் இன்று

7➤

## ராஜிதவைக் கைது செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஜூலை 11

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு ஒப்படைத்து அரசுக்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

7➤

# அகில இலங்கை ரீதியில் 13, 392 பேருக்கு 9 ஏ

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 11

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு வெளியிடப்பட்டன. அதற்கமைய இம்முறை 13 ஆயிரத்து 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். அதேவேளை சுமார் 2 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த மார்ச் 17ஆம் திகதி முதல்

7➤

# O/L பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு
# 237,026 மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி!

கொழும்பு, ஜூலை 11

2024 (2025) - கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில், பெறுபேறுகளின் படி 237,026 மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் யு.மு.ளு. இந்திகா குமாரி தெரிவித்தார்.

2024 சாதாரண தரப் பரீட்சை கடந்த 2025 மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நாடு முழுவதும் 3,664 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெற்றது.

இதில் 474,147 மாணவர்கள் தோற்றியிருந்த நிலையில், 398,182 பேர் பாடசாலை விண்ணப்பதாரர்களாவர்.

இந்த நிலையில் வெளியாகிய சாதாரண தரப் பரீட்சைப்பெறுபேறுகளின்படி, 237,026 மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 73.45% ஆகும்.

அனைத்து பாடங்களிலும் 9 'யு' சித்திகளை பெற்ற 13,392 மாணவர்கள் உள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4.15 சதவீதமாகும். இதேவேளை பரீட்சை மீள் மதிப்பீட்டு விண்ணப்பங்கள் ஜூலை 14 முதல் 28 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் தேவைப்பட்டால் பரீட்சைத் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1911 க்கு அழைப்பதன் மூலமோ, அல்லது பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளையின் தொலைபேசி இலக்கங்களான 0112-785922, 0112-784208, 0112-786616 மற்றும் 0112-784537 ஆகியவற்றின் மூலமோ விசாரணைகளை மேற்கொள்ளலாம்.

இதற்கிடையில், அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும்விண்ணப்பங்களை அனுப்புவதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி அந்தந்தப் பாடசாலையின் பரீட்சை பெறுபேறுகள் பட்டியலைப் பதிவிறக்கி அச்சிடப்பட்ட பிரதியைப் பெறுவதற்கு வசதிகள்செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேபோல் அனைத்து மாகாண மற்றும் வலய கல்வி பணிப்பாளர்களும் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி, அனைத்துப் பாடசாலை விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகளை பதிவிறக்கம் செய்யும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்களும் தங்கள் பரீட்சை இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்வதன் மூலம் பெறுபேறு பட்டியலைப் பதிவிறக்கம் செய்யவோ அல்லது பார்வையிடவோ வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வாறு பெறப்படும் அச்சிடப்பட்ட பெபெறுபேறுகள் பட்டியல், உயர்தர வகுப்புகளுக்கு சேருவதற்கு செல்லுபடியாகும் ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலை விண்ணப்பதாரர்களின் அச்சிடப்பட்ட பெறுபேறுகள்பட்டியல்அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கும், தனியார் விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள்பட்டியல்அந்த விண்ணப்பதாரர்களுக்கும் மீள் மதிப்பீட்டிற்குப் பின்னர் வழங்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், பரீட்சைச் சான்றிதழ்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இணையவழி மூலம் விண்ணப்பிக்க வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலமுல்ல பகுதியில் துப்பாக்கி சூடு– ஒருவர் காயம்!

கொழும்பு, ஜூலை 11

ஹிரண பொலிஸ் பிரிவின் மாலமுல்ல பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தால் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் இன்று (11) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மாலமுல்ல பகுதியில் உள்ள வீடு ஒன்றின் அறையில் இருந்த நபரை, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீட்டின் ஜன்னலை உடைத்து அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாலமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமோ அல்லது சந்தேக நபர் பற்றிய தகவலோ இன்னும் வெளியாகவில்லை.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் மற்றும் சந்தேக நபர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் தெரியவரவில்லை.

இந்தநிலையில் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குடு சலிந்துவிற்கும் நிலங்கவிற்கும் இடையிலான மோதலில் குடு சலிந்துவின் தரப்பில் ஒருவரை குறிவைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பொம்மைகளாக இருப்பதை விட வீரப்பெண்ணாக இருப்பதே மகிழ்ச்சி







வெற்றிபெற்று பொம்மைகளாக இருப்பதைவிட தோல்வியடைந்து வீர பெண்ணாக இருப்பதே மகிழ்ச்சி என சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் வெற்றி வெற்று, பொம்மைகளாக இருப்பதை விட தோல்வி அடைந்து வீர பெண்ணாக இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்

சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நோர்வூட் வெஞ்சர் ஆலய மண்டபத்தில், வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

நிகழ்வில் சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் உப-தலைவர் டொமினிக், தேசிய அமைப்பாளர் விக்னேஷ்வரன், பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் தியாகராஜா, அமைப்பாளர்களான சதீஸ்குமார், கேதீஸ், தேவராஜ், விஜயராகவன் உட்பட இளைஞர், மகளிர் அணி சார்பிலும், தோட்ட கமிட்டி தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பொதுச்செயலாளர்.

கடந்த முறை நாம் மைக் சின்னத்தில் போட்டியிட்ட போது நிறைய பேர் என்னிடம் கேட்டார்கள், அரசாங்கத்தோடு நீங்கள் சேர்ந்து கேட்டிருந்தால் வெற்றியடைந்திருப்பீர்கள், தனியாக கேட்டதால் தான் தோல்வியடைந்து விட்டீர்கள் என்று

இன்று அரசாங்கத்தின் பேரலையில வெற்றி பெற்ற நிறைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் இருக்கிறார்கள். ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

என்றைக்கு அரசாங்கம் ஆணை கொடுக்கும் மக்களுக்கு சேவை செய்யலாம் என்று அரசாங்க மேல் மட்ட ஆணைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதை போல் தெரியவில்லை, என்னைக்கு ஆணை கிடைக்கும் அந்த ஆணை வந்தவுடன் சேவை செய்வோம் என ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி பெற்று இப்படி பொம்மையாக இருப்பதை விட தோல்வியடைந்து வீர பெண்ணாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

தோல்வியடைந்தாலும் விதையாக பிரதேச சபை ஆசனங்களை பெற்றிருக்கிறோம். இந்த விதை இன்னும் பெரிய விருட்சமாக மாறும். அதை மாற்றாமல் என்னுடைய தந்தை சந்திரசேகரன் எப்படி ஓயவில்லையோ அதேபோன்று தலைவர் சந்திரசேகரனுடைய ஆசையின் படி அவருடைய ஆசியோடு அவருடைய கனவை நனவாக்காமல் இந்த அனுஷா சந்திரசேகரன் ஒருபோதும் ஓயமாட்டேன்.

உங்களுடைய வாக்குகளால் தான் எங்களுடைய கட்சியின் வெற்றி சாத்தியம் ஆக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய என்பதை விட நம்முடைய கட்சி, நமது மாற்றம், நம்முடைய கட்சியின் வளர்ச்சி உங்களால் தான் சாத்தியமாகியது. ஆகவே என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன் என தெரிவித்தார். (ஐ)

## வேரூன்றிய ஒரு தேசமாக கட்டியெழுப்புவோம்



கொழும்பு, ஜூலை 11

வரலாற்று பாரம்பரியத்துடன் இயல்பான உறவு இல்லாமல் ஒரு சமூகமாக முன்னேறுவது சாத்தியமில்லை என்றும், அதற்கேற்ப நாட்டின் அபிவிருத்திப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க ரு/ஹுனு கதிர்காமம் புனிதஸ்தலத்தில் வியாழக்கிழமை (10) பிற்பகல் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம விகாரைக்குச் சென்று மத அனுஷ்டானங்களில் ஈடுபட்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அதன் பின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க கிரிவெஹெர ரஜமகா விஹாரையின் விகாராதிபதி வண, கொபவக தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன், சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

ருஹூணு கதிர்காம தேவாலயத்தில் நடைபெறும் வருடாந்த எசல பெரஹெராவின் இறுதி ரந்தோலி பெரஹெராவை பார்வையிட்ட ஜனாதிபதி, ஹஸ்திராஜா யானை மீது புனித கலசத்தை வைத்தார். அதன் பின்னர் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஒரு நாட்டை அதன் வரலாற்று பாரம்பரியத்தின் அடிப்டையில் மாத்திரமே முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

உலகில் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் ஒவ்வொரு நாடும் அதன் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன் அதன் மீது கட்டியெழுப்புவதன் மூலமே அந்த வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒரு நாடாக, நாமும் நமது வரலாற்று பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்திப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நமது சமூகத்தை ஒரு கலாசார சமூகமாக மாற்ற புத்த மதம் உதவியது என்றும், பௌதீக வளங்களை முழுமைப்படுத்த முயற்சிக்கும் சமூகத்தில், மறைந்து வரும் சமூக மதிப்புகள் மற்றும் பண்புகள் மீண்டும் மீட்சிபெற, இவ்வாறான கலாசார நிகழ்வுகள் வாயப்பளிக்கிறது என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

2186 வருடங்களாக இந்த ரு/ஹுனு கதிர்காம பெரஹரா சுமார் நூறு தலைமுறையாக நடைபெற்றுவருவதுடன், இந்த கலாசார நிகழ்விற்கும் மக்களின் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்பு காரணமாகவே இந்த பெரஹராவை நடத்துவது சாத்தியமாகியுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இம்முறை பெரஹெராவை வெற்றிகரமாக நடத்துவதற்கு பங்களித்த விகாராதிபதி தேரர் உட்பட அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன, ஊவா மாகாண ஆளுநர் சட்டத்தரணி கபில ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவீர, கதிர்காமம் பிரதேச சபையின் தவிசாளர் தர்மபால ஹேரத், மொனராகலை மாவட்ட செயலாளர் பசன் ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

## 35 வருடங்களின் பின் தேர் ஏறி அடியவர்களுக்கு அருள்பாலித்த மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்பாள்!

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்பாள் ஆலய தேர் திருவிழா 35 ஆண்டுகளின் பின்னர் நேற்றைய தினம் பக்திபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்திர மகோற்சவம் கடந்த ஜூன் மாதம் 26ம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 14ஆம் நாளான நேற்றைய தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மயிலிட்டி பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து அப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

மயிலிட்டி பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தமையால் ஆலயம் சேதமடைந்ததுடன், ஆலயத்தின் சித்திர தேரும் முற்றாக அழிவடைந்தது.

யுத்தம் நிறைவடைந்து பின்னரான காலப் பகுதியில் மயிலிட்டி பகுதிக்கு மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, ஆலயத்தை மக்கள் தமது நிதி பங்களிப்பில் புனரமைத்தனர்.

அத்துடன் மக்களின் நிதி பங்களிப்பில் ஆலயத்திற்காக சித்திர தேரும் உருவாக்கப்பட்டு, கடந்த ஜூலை 07ஆம் திகதி சித்திர தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றது.

இந்த நிலையில், நேற்றைய தினம் மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்பாள் புதிய சித்திர தேர் ஏறி அடியவர்களுக்கு அருள்பாலித்திருந்தார்.

## இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு தீர்வை வரியின்றி பொருட்களை ஏற்றுமதி செய்ய புதிய வாய்ப்பு!

கொழும்பு, ஜூலை 11

பிரித்தானியாவின் வணிகம் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தால் புதிய வர்த்தக தொகுப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது இலங்கை, நைஜீரியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற வளரும் நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களை தீர்வை வரியின்றி இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தக யோசனை, இந்த புதிய முறைமைக்கான புதுப்பிப்பின் ஒரு பகுதியாக, பிரித்தானிய வணிகங்கள் மற்றும் நுகர்வோர் அதிக போட்டி விலையில் இறக்குமதிகளிலிருந்து பயனடைய முடியும் என்று பிரித்தானிய வணிகம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



## பாஜகவின் சுமை தாங்காமல் விரக்தியின் விளிம்பில் பிதற்றுகிறார் இபிஎஸ்: அமைச்சர் சிவசங்கர் விமர்சனம்

பாஜகவின் சுமை தாங்காமல் விரக்தியின் விளிம்பில் இபிஎஸ் பிதற்றத் தொடங்கியுள்ளார் என போக்குவரத்துதுறை அமைச்சர் சிவசங்கர் விமர்சனம் செய்துள்ளார். பாஜகவின் கொள்கைகளை தானே பேசும் சூழலுக்கு எடப்பாடி பழனிசாமி வந்துவிட்டார். திமுக கூட்டணி வலுவாக உள்ளதால் எல்லாவற்றையும் விமர்சனம் செய்து வருகிறார். ஆடு, மாடுகளுக்கு மாநாடு நடத்தி தமிழக மக்கள் விழுந்து விழுந்து சிரிக்கும் சூழலை சீமான் ஏற்படுத்திவிட்டார் என்றும் அவர் விமர்சித்தார். (ஐ)

## அழகு முத்துக்கோனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



அடிமைப்பட்டு உயிர் வாழ்வதை விட சுதந்திர மனிதனாய் உயிர் விடுவோம் என்று முழக்கமிட்டவர் அழகு முத்துக்கோன் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார். இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. மாவீரன் அழகு முத்துக்கோன் பிறந்தநாளையொட்டி சென்னை எழும்பூரில் அவரது திருவுருவப் படத்திற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அவரைத் தொடர்ந்து அமைச்சர்கள், சென்னை மாநகராட்சி மேயர் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் "அடிமைப்பட்டு உயிர் வாழ்வதைவிட சுதந்திர மனிதனாய் உயிர்விடுவோம்" என்று முழக்கமிட்டு விடுதலை வேட்கைக்கான விதையைத் தமிழ் மண்ணில் ஆழ ஊன்றிய வீரர் அழகு முத்துக்கோனின் தியாகம் அணையாமல் நம்முள் கனன்று கொண்டே இருக்கட்டும்!. என தெரிவித்துள்ளார். (ஐ)

## கோரிக்கைகளை வலியுறுத்தி தனியார் தொழிலாளர்கள் திடீர் வேலை நிறுத்தம்

புதுச்சேரி ஒதியம்பட்டில் இயங்கி வரும் தனியார் தோல் தொழிற்சாலையில் பணிபுரியும் எல்பிஎப் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, வருடாந்திர பண்டிகை போனஸ், போக்குவரத்துப்படி, பஞ்சப்படி, கேண்டீன் அலவன்ஸ், சிஎல் விடுமுறை, விடுமுறை நாட்களில் வேலை பார்த்தால் கூடுதல் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பணியை புறக்கணித்து நேற்று உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த எதிர்க்கட்சி தலைவர் சிவா, போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை தொழிற்சாலை நிர்வாகத்திடம் வழங்கி, கோரிக்கைகள் அனைத்தும் ஒருவார காலத்துக்குள் தீர்க்க வேண்டும். அதுவரை தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு பணி செய்வார்கள்.

நிர்வாகம் தொழிலாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அலட்சியம் காட்டினால் தொடர் வேலை நிறுத்த போராட்டம் நடத்த நேரிடும் என்றும் எச்சரித்தார். பின்னர் நிர்வாகம் தரப்பில் கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து தொழிலாளர்கள் பணிக்கு திரும்பினர். இந்த சந்திப்பின்போது தொழிற்சாலை பொதுமேலாளர் சிவதாசன், மனிதவள மேம்பாட்டு அதிகாரி ஆனந்த், எல்பிஎப் தொழிற்சங்க பொறுப்பாளர்கள் அமுதா, லட்சுமி, கல்பனா, அமுதவல்லி, புண்ணியகோடி மற்றும் திமுக கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். (ஐ)

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற ரூ.2.15 கோடிக்கான காசோலையை வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்




தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற ரூ.2.15 கோடிக்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரனிடம் வழங்கினார்.

அனைத்து அறிவுத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி காணவேண்டும் என்ற தலையாய நோக்கத்தோடு 1946-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயர் குறிக்கோளாகிய கலைக் களஞ்சியத் திட்டத்தை திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் இந்திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்தார். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவருடைய இந்த அறிவிப்பை மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் 20.10.1947-இல் கலைக்களஞ்சியப் பணி தொடங்கப் பெற்றது. அன்றைய துணைவேந்தர் முனைவர் ஆ. இலக்குமணசாமி அவர்கள் தலைமையில் கலைக்களஞ்சிய உருவாக்கத்திற்கு 'அறிஞர் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. பேராசிரியர் மு.வரதராசன், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டி.கே. சிதம்பரநாத முதலியார் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். கல்கி ரா.கிருஷ்ண மூர்த்தியும் பேராசிரியர் கே.சுவாமிநாதனும் இக்குழுவின் செயலாளர்களாக நியமிக்கப் பெற்றனர். ம.ப.பெரியசாமித்தூரன் அவர்கள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்திற்குரிய இடத்தைத் தந்து உதவியது.

தமிழில்கலைக்களஞ்சியத்தைப்பத்துத்தொகுதிகளாக கொண்டுவரவேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 750 பக்கங்களைக் கொண்டதாகவும், பொதுமக்களுக்கும் விளங்கக்கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத்தையும் திறம்பட எடுத்துரைப்பதாகவும், பல்துறை அறிவு பற்றிய பதிவுகளை அகரவரிசைப்படுத்தி, அவற்றைக் கட்டுரை வடிவில் தெளிவாக விளக்குவதாகவும் அமைந்த சிறப்பானதோர் அறிவுக் கருவூலமாகக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது.

முதல் தொகுப்பு, அதன் பணி தொடங்கி 6 ஆண்டுகட்குப் பின் 1954 -இல், 742 பக்கங்களுடன் வெளிவந்தது. இதற்கு 207 அறிஞர்கள், அவரவர் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். பணி தொய்வின்றித் தொடர்ந்து நடந்தது.1968-இல் 10-ஆம் தொகுதி (இணைப்புத் தொகுதி) வெளியாயிற்று. இவற்றுள் 5-ஆவது தொகுதியை அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் வெளியிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது கலைக்களஞ்சிய ஆக்கப்பணிக்குப் பெருமை சேர்த்தது.

இந்திய மொழிகளில் 10 தொகுதிகளைக் கொண்ட விரிவான கலைக்களஞ்சியம் தமிழில் தான் முதன் முதலாக வந்தது என்பது பெருமிதமான செயலாகும். இதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கபூர்வமான தமிழ்த் தொண்டாகும். இவற்றிற்கு 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கழகம் வாயிலாக இதுவரை 60 நூல்கள், கலைக்களஞ்சியக் குறுந்தகடு ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. கன்னித் தமிழ், கணினித் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மென்தமிழ், மின் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மின் தமிழாகத் தமிழை முழுவதுமாக மாற்றினால், வரும் தலைமுறைகளுக்கு கருவிகளே தமிழைக் கற்றுக் கொடுக்கும்.

ஆகவே இப்போது செயற்கை நுண்ணறிவுக்கும் தமிழைக் கொண்டு சேர்க்கும் திட்டப் பணிகளைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவும், தொடர்ந்து தொய்வின்றி செயல்படவும் உதவிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.04.2025-ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2025-2026ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ் வளர்ச்சிக் கழகம் தொய்வின்றி செயற்பட ரூபாய் 2 கோடி வைப்புத் தொகை வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயற்படுத்திட, தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் 2 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைத்து அதிலிருந்து வரும் வட்டித்தொகையை மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், இ.ஆ.ப., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு), தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர். (ஐ)



# பெரியார் என்னும் பெண்ணியலாளர்!

நவீன பெண்ணிய வரலாறு 19ஆம் நூற்றாண்டில் இருந்து தொடங்குவதாக பெண்ணிய வரலாற்றுப் பதிவுகளும் நூல்களும் கூறுகின்றன.

பெண்ணிய இயக்கங்கள்வலுப்பெற்றதின்பின்னணி மற்றும் தோற்றுனர்களை முன்வைத்து, ஒவ்வொரு காலகட்டத்தையும் பெண்ணிய அலைகளாகப் பகுத்தனர். இக்காலகட்டத்தில் பல காத்திரமான புகழ்பெற்ற நூல்கள் வெளியாகி, புதிய சிந்தனை அலைகளைத் தோற்றுவித்தன.



### முதல் அலை (1848 - 1920)


பெண்களின் வாக்குரிமைக்கும் கல்விக்குமான போராட்டங்கள் எழுச்சிகரமாக நடந்த காலகட்டம். இது அமெரிக்க அரசியலமைப்பிற்கான இருபதாம் திருத்தத்தின் ஒப்புதலுடன் வெற்றி பெறுகிறது. ‘பெண்ணியத்தின் தாய்’ என்று அழைக்கப்படுகின்ற மேரி வோல்ஸ்டோன்கிராப்ட் (ஆயசல றுழடடளவழநெஉசயகவ) ‘பெண்ணின் உரிமைகள்’ ( யு எவைனஉையவழைெ ழக வாந சபைாவள ழக றழஅநெ) என்ற நூலை 1792ஆம் ஆண்டு வெளியிடுகிறார். பல சர்ச்சைகளை உண்டு பண்ணிய இந்நூல் முதலில் கவனம் ஈர்க்காவிட்டாலும், 1892இல் பரவலாகக் கவனமடைகிறது.

### இரண்டாம் அலை (1963 - 1980)

ஆண், பெண் பாலின பாகுபாட்டு வேலைகளுக்கு (புநனெநச சழடநள) எதிரான போராட்டங்களின் காலகட்டமாக பரிணமித்தது. இக்காலப்பகுதியில் சிமோன் தெ பொவார் (ளுைஅழநெ னந டீநயரஎழசை) எழுதிய இரண்டாம் பால் ‘வுாந ளநஉழனெ ளநஒ’(1949) என்கிற நூல் மிக முக்கியமானது.

### மூன்றாம் அலை (1990 கள்)

பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்களையும் அதிகார மையங்களில்



பெண்களின் தாழ்நிலையையும் எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்ற காலப்பகுதியாக இனங்காணப்படுகிறது. 1989இல் கிம்பளே கிரன்ஷா (முைஅடிநசடந ஊசநளொயற) வின் ‘குறுக்கீட்டாய்வு பெண்ணியத்தின் அறிமுக நால்’ ( ஐவெசழனரஉவைழெ வழ வைெநசளநஉவழையெடவைல) இன, மத, நிற, வர்க்க, பாலின ஒடுக்குமுறைகள் எவ்வாறு இடைவெட்டும் என்று எடுத்துரைத்தது. பெண்ணிய வரலாற்றில் இது மிகப்பெரும் திருப்புமுனை.

### நான்காம் அலை (2005 களிலிருந்து தற்காலம் )

ஆநவழழ இயக்கம் தரனா பர்க் (வுயசயயெ டீரசமந) எனும் கறுப்பின பெண்ணியவாதியால் 2006 ஆம் ஆண்டளவில் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு எதிராக ஆரம்பமாகி, இன்று வரை பல்வேறு நாடுகளில் தொடர்ந்து நடைபெறுகிறது. 2017 இல் வெளிவந்த மேரி பியர்ட் (ஆயசல டீநயசன) எழுதிய ‘பெண்ணும் அதிகாரமும்’ (றுழஅநெ ஞ்ழறநச) என்கிற நூல் பெண்களை பொதுவெளிப்பேச்சு மற்றும் அதிகாரத்திலிருந்து விலக்குவதன் வேர்கள் பண்டைய கிரேக்கம் மற்றும் ரோம் வரை நீள்கிறது எனக்கூறுகிறது. அவ்வாறு இயங்கும் பெண்கள் கேலி செய்யப்பட்டார்கள் என்பதையும் அந்நூல் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

18ஆம் நூற்றாண்டு தொடங்கி 21ஆம் நூற்றாண்டு வரை அமெரிக்க, ஐரோப்பிய பெண்ணிய போராட்ட காலகட்டங்களில் சரித்திரம் படைத்த நூல்களைப் பார்த்தோம்.

சிமோனின் ‘இரண்டாம் பால்’ நூலின் பெண்ணிய கோட்பாடுகள், பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள் நூலை ஒத்திருந்தது. சிமோனின்நூல்வெளியாவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பே, ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற புரட்சிகர நூலை பெரியார் எழுதியிருந்தார். பத்து ரூபாய்க்கு (இந்திய ரூபாய்கள்) 80 பக்க இந்நூல் இப்போதும் பரவலாக விற்பனையாகி வருகிறது.

பெரியார் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளர். மக்களில் சரி பாதியாக உள்ள பெண்களின் விடுதலைக்காகப் பேசியவர். பெண்களைப் பற்றித் தந்தை பெரியார் சிந்தித்த அளவுக்கு உலகத்தில் வேறு எந்த ஒரு சிந்தனையாளரும் சிந்திக்கவில்லை.

‘பெண் என்பவள் ஒரு ஆணுக்கு சமையல்காரி, சம்பளம் வாங்காத வீட்டு வேலைக்காரி, ஆணின் காமக் கிழத்தி, ஓர் ஆணின் குடும்பப் பெருக்கிற்கு பிள்ளை உற்பத்தி செய்யும் ‘இயந்திரம்’, பிள்ளைக் குட்டி சுமக்கும் தோல்பை என்றும் பெண்ணின் கழுத்தில், காதில், உடலில் ஆங்காங்கே நகையை மாட்டி உள்ளார்கள்’ என்கிறார் பெரியார்.

1942 இல் பெண் ஏன் அடிமையானாள் என்கிற நூலின் முன்னுரையில் ‘ஒன்பதாவது பத்தாவது அத்தியாயங்களாகிய ‘கர்ப்பத்தடை’, ‘பெண்கள் விடுதலைக்கு ‘ஆண்மை’ அழிய வேண்டும்’ என்கிற தலைப்புகளையே, கர்ப்பத்தினாலும் பிள்ளைகளைப் பெறுவதனாலும் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகளை எடுத்துக்காட்டுவதுடன் ‘பெண்கள் நலத்துக்கு ஆண்களால் – ஆண்கள் முயற்சியால் ஒரு நாளும் நன்மை ஏற்பட்டு விடாது என்றும் பெண்கள் தங்களை ஆண்களுக்கு அடிமையாகவே இருக்கவே கடவுள் படைத்தார் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டு, தாங்களும் ஆண்களுக்கு சமமானவர்கள் என்றும், எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்றும் கருதிக் கொண்டு தங்களுக்குத் தாங்களே பாடுபட வேண்டும்என்பதை வலியுறுத்தவே எழுதப்பட்டவையாகும்’ எனவும் எழுதியுள்ளார்.

பத்து அத்தியாயங்களில் கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபச்சாரம், விதவைகள் நிலைமை, சொத்துரிமை என்கிற இதர தலைப்புகளில் உருவான கட்டுரைகள் அடங்குகின்றன.

பெரியார் எதிர்ப்புப் பிரசாரங்கள் இந்தியா, இலங்கை மற்றும்புலம்பெயர்தேசங்களில்வலதுசாரிகளால்தீவிரமாக முன்னெடுக்கப்படும் இக்காலகட்டங்களில், இந்நூலைப் பற்றிப் பேச வேண்டிய தேவை மிக அவசியமாகிறது. இளம் வயதினருக்கு பிறந்தநாள் பரிசாக அளிப்பதற்கு இதை விடச் சிறந்த புத்தகம் இருக்க முடியாது.

கர்ப்பத்தடை பற்றி இந்நூல் வெளியாவதற்கு முன்பே பேசியுள்ள பெரியார், அதன் அவசியத்தை தான் பேசுவதற்கும் மற்றவர்கள் பேசும் காரணங்களுக்கும் உள்ள வேறுபாட்டை சுட்டிக் காட்டுகிறார். பெண்களின் விடுதலை பெறவும் தன்னுரிமை பெறவும் கர்ப்பத்தடை அவசியம் என பெரியார் வலியுறுத்தினார். மக்கள்தொகை வேகமாக வளர்ந்து வரும் அக்காலகட்டத்தில், நாட்டின் பொருளாதாரத்திற்காகவே மற்றவர்கள் கர்ப்பத்தடையை பேசினார்கள் என்பது அவரின் வாதமும், உண்மை நிலையும் கூட. ஆண் பெண் இருவரிடமும் தன்னிறைவுக்கும் சுய மரியாதைக்கும் அதிகமாக பிள்ளைகளை பெறுவது இடையூறாக உள்ளது என்று அவர் சொன்னதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

பெண்களுக்கு சொத்தும் வருமானமும் இல்லாத அக்காலகட்டத்தில் மற்றவர்களின் ஆதரவை நாடி நிற்க வேண்டிய தேவை இருந்தமை, பெண் அடிமைத்தனத்தை ஊக்குவித்தது. மேலும் பெண்கள் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாவதும், மிக விரைவாக உடல் முதுமையடைவதும், ஆயுள் குறைவதும், பிரசவத்தின் போது மரணங்கள் நேர்வதும் பிள்ளைப் பேறு என்பதனாலேயே என சுட்டிக் காட்டும் பெரியார், அறிவியல் ரீதியாக தர்க்கம் புரிகிறார். இதைத்தான் சமூக மறு உற்பத்தி செயற்பாட்டில் பெண்களின் அதீத பங்கு அவர்களை எவ்வாறு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நலிவுறச் செய்கிறது என கடந்த அத்தியாயங்களில் பேசியிருந்தோம்.

‘இந்தத் தேசத்தில் பிறக்கும் குழந்தைகளை எல்லாம் அரசாங்கமே வளர்த்து அவைகளுக்கு கல்வி கொடுத்து மேஜர் ஆக்கி விட வேண்டும் என்கிற ஒரு நிபந்தனை இருக்குமேயானால், சுகாதார மந்திரி அரசாங்கத்தின் சார்பாய் கர்ப்பத்தடையை எதிர்த்திருக்க மாட்டார்’, என்கிற பொதுவுடைமை கருத்தியலை முன்மொழிகிறார். மேஜர் ஆக்கிவிட வேண்டும் என்பதில் உணவு, உடை உறையுள் வழங்குவதும் அடக்கம். இந்த அடிப்படை வசதிகள் இல்லாமல் ஒரு குழந்தையின் கல்வியோ, வளர்ச்சியோ நிலை கொள்ளாது.

இதையொத்த கருத்துக்களை இரண்டாம் அலை பெண்ணியவாதிகள் மேலை நாடுகளில் பல்வேறு விதமாக கூறியிருந்ததோடு இது ரஷ்ய புரட்சியில் உருவான கருத்தாக்கங்களின் ஒரு அங்கமாகக் காணப்பட்டது. இது பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

வெறுமனே ஐந்து வருட பள்ளிப்படிப்பை கொண்டிருந்த பெரியார், பட்டங்கள் பல பெற்ற அமெரிக்க, ஐரோப்பிய புரட்சியாளர்களின் பெண்ணியச்சிந்தனைகளுக்கு சற்றேனும் குறையாத ஞானத்தையும் நடைமுறை வாழ்வில் பெற்ற சிந்தனைகளையும் கொண்ட தமிழ் புரட்சியாளர்.

கருத்தடை இயற்கைக்கு முரணானது என்று வாதிடுவோருக்கும் அவர் பதில் வைத்திருந்தார். உலகில் உள்ள மற்றைய உயிரினங்கள் இயற்கை வாழ்வு நடத்தும் போது மனிதர்கள் இயற்கைக்கு மாறாக பல விடயங்கள் செய்து வருகிறார்கள், ஆகையால் இவ்விடயத்தில் அதன் தொலைநோக்கு பார்வையில் நன்மை கருதி ‘இயற்கைக்கு விரோதம்’ ஆக செயல்படுவதால் ஒன்றும் ஆகிவிடாது எனக் கூறுகிறார். மேலும் ‘மானிட வர்க்கம் பெருகாவிட்டால், பெண்களுக்கு என்ன ஆபத்து வந்து விடும்?’ என்று கேள்வி எழுப்புகிறார். இதுவரை பெருகி வந்துள்ள மனித வர்க்கத்தால் ஏற்பட்ட நன்மை தான் என்ன என்று ஒரு வினாவையும் முன்வைக்கிறார்.

கருத்தடை என இங்கு பெரியார் கூறுவது குழந்தைப் பேற்றை முடிவு பண்ணுவதற்கான சுதந்திரமே. கல்யாண விடுதலை என்கிற அத்தியாயத்தில், கல்யாணங்களால் பெண்கள் கொடுமைக்குள்ளாவதாக கூறிக் கொண்டு, இக்கொடுமைகள் தொடரும் பட்சத்தில் ஒரு அரை நாற்றாண்டுக்குள் கல்யாணச்சடங்கும் சொந்தமும் உலகத்தில் மறைந்து போய்விடும் என முன்னறிவித்தார். 2025 இல் ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு பின்னர் இவை மெய்யாகி வருகிறது என பல தரவுகள் நமக்குச் சொல்கின்றன.

பெரியார் காலத்திலும் அவருக்கு பின்னரும் பல சட்டங்கள் உருவாகாமல் இருந்திருந்தால், அரை நூற்றாண்டுக்கு முன்னரே கல்யாணச்சடங்குகள் காணாமல் போயிருக்கும் என்பது நிதர்சனம்.



# பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பேருந்தில் சென்ற 9 பயணிகள் சுட்டுக் கொலை

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பேருந்தில் சென்ற 9 பயணிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். குவெட்டாவில் இருந்து லாகூர் சென்று கொண்டிருந்த பேருந்தை வழிமறித்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்கள், பயணிகளை இறக்கி சோதனை செய்தபிறகு 9 பேரை சுட்டுக் கொன்றனர். (ஐ)

# கனடாவில் இந்திய நடிகர் ஓட்டலில் துப்பாக்கிச் சூடு




கனடாவில் உள்ள இந்திய நடிகர் ஓட்டலில் காலிஸ்தான் பிரிவினைவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்திய நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவுக்கு சொந்தமான ஓட்டல் கனடா நாட்டில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த ஓட்டல் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில் அமைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு தான் இந்த ஓட்டல் திறக்கப்பட்டது. ஆனால் நேற்று இரவு திடீரென அங்கு சென்ற காலிஸ்தான் பிரிவினைவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். 9 முறை அவர்கள் சுட்டனர். இந்த தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்ஜித் சிங் லட்டி பொறுப் பேற்றுள்ளார். பாப்பர் கல்சா இன்டர்நேஷனலுடன் தொடர்புடையவர். (ஐ)

## பூமிக்கு திரும்புகிறார் விண்வெளி நாயகன் சுபான்ஷ் சுக்லா



சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் இருந்து வரும் 14ம் தேதி இந்திய வீரர் சுபான்/ சுக்லா புறப்படுகிறார். இஸ்ரோ, நாசா மற்றும் ஆக்சியம் ஸ்பேஸ் நிறுவனங்களின் கூட்டு முயற்சியாக, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்பும் ஆக்சியம்-4 திட்டம் மூலம் இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷ் சுக்லாவுடன், அமெரிக்கா, ஹங்கேரி, போலந்தை சேர்ந்த 4 வீரர்கள் கடந்த மாதம் 25ம் தேதி விண்வெளி சென்றனர். அவர்கள் பயணித்த டிராகன் விண்கலம் 26ம் தேதி மாலையில் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது.

14 நாட்கள் பயணமாக சென்றுள்ள அவர்கள் விண்வெளி நிலையத்தில் இருந்தவாறு பல்வேறு ஆய்வுகளை நடத்தினர். அத்துடன் தங்கள் கடைசி பணி ஓய்வு நாளையும் எடுத்துக்கொண்டனர். தற்போது பூமிக்கு திரும்புவது குறித்த நாசாவின் அறிவிப்புக்காக காத்திருப்பதாக ஆக்சியம் நிறுவனம் செய்திக்குறிப்பு ஒன்றில் கூறியுள்ளது. அதில் மேலும், பூமியில் இருந்து 250 மைல்களுக்கு மேலே இருந்தவாறு விண்வெளி வீரர்கள் 60க்கு மேற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர். ஏராளமான புகைப் படம் மற்றும் வீடியோக் களை எடுத்து, தங்கள் அன்பார்ந்தவர்களுடன் தொடர்பில் இருந்து வருகிறார்கள் என கூறப்பட்டு இருந்தது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் இந்த நாட்களில் 230க்கு மேற்பட்ட சூரிய உதயத்தை பார்த்துள்ள சுபான்/ சுக்லா உள்ளிட்ட விண்வெளி வீரர்கள், சுமார் 1 கோடி அதாவது 96.5 லட்சம் கி.மீ. தொலைவுக்கு பயணம் செய்திருப்பதாகவும் ஆக்சியம் கூறியுள்ளது. இந்நிலையில், சுபான்/ சுக்லா வருகிற 14ம் தேதி பூமி திரும்புவார் என்று நாசா அறிவித்து உள்ளது. இந்திய நேரப்படி ஜூலை 14ம் தேதி மாலை 4.35 மணிக்கு டிராகன் விண்கலம் மூலம் பூமியை நோக்கி புறப்படுகிறார். 17 மணிநேர பயணத்திற்கு பிறகு டிராகன் விண்கலம் கடலில் விழும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குழுவினரை உற்சாகமாக வரவேற்க நாசா ஏற்பாடு செய்துள்ளது.

# 'நாங்கள் நினைத்தால் ஒரு டிரோனை அனுப்பி போட்டு தள்ளிவிடலாம்'

## அமெரிக்க அதிபர் டிரம்புக்கு ஈரான் பகிரங்க கொலை மிரட்டல்



ஈரானின் அணுசக்தி திட்டங்கள் உலகிற்கே ஆபத்தானவை என கூறி அந்நாட்டின் மீது இஸ்ரேல் கடந்த மாதம் தாக்குதல் நடத்தின. இதற்கு ஈரானும் தக்க பதிலடி கொடுத்தது. அதே நேரத்தில் ஈரான் மீது அமெரிக்காவும் வான்வெளி தாக்குதல் நடத்தியது. தற்போதைய நிலையில் ஈரான்-இஸ்ரேல் இடையிலான தாக்குதல் முடிவுக்கு வந்துள்ளன. இருப்பினும் அமெரிக்க அதிபர் டிரம்ப் மீது ஈரான் மக்களும் ஈரான் அதிகாரிகளும் கடும் கோபத்தில் உள்ளனர். இந்த சூழலில் ஈரான் தலைவர் அயதுல்லா கமேனியின் பிரதான ஆலோசகரான ஜாவத் லாரிஜினி தொலைக்காட்சி ஒன்றுக்கு ஒரு பேட்டி அளித்தார். அதில், 'அமெரிக்காவின் புளோரிடாவில் ஒரு ஆடம்பர பங்களா இருக்கிறது.

அதில்தான் டிரம்ப் அடிக்கடி தங்குவார். அங்குதான் சூரிய குளியல் எடுப்பார். இது எங்களுக்கு தெரியும். நாங்கள் நினைத்தால் அந்த சமயத்திலேயே ஒரு டிரோனை அனுப்பி அங்கேயே கொலை செய்யலாம்' என்று கூறியிருக்கிறார். டிரம்ப் மீது ஈரான் மக்கள் கடும் கோபத்தில் இருக்கின்றனர். டிரம்பை கொலை செய்ய வேண்டும் என ஈரானில் ஆன்லைன் பரப்புரையே நடைபெறுகிறது. இதற்காக நிதியும் திரட்டுகிறார்களாம். ஜூலை 7ம் தேதி வரை டிரம்பை கொலை செய்ய வேண்டும் என்பதற்காக 27 மில்லியன் டாலர்கள் வரை நிதி திரட்டப்பட்டுள்ளதாம். 100 மில்லியன் டாலர்கள் நிதி திரட்டுவதை இலக்காக கொண்டிருக்கிறார்களாம்.

டிரம்பை யார் கொலை செய்கிறார்களோ அவருக்கு இந்த 100 மில்லியன் டாலர் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதுதான் மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி ஏற்பட்டிருக்கிறது. இந்த சூழலில் டிரம்பை கொலை செய்வோம் என ஈரான் மூத்த அதிகாரி தெரிவித்திருப்பது மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. (ஐ)

# செங்கடலில் ஹவுதிகள் தாக்குதலில் கப்பல் மூழ்கி 4 ஊழியர்கள் பலி



செங்கடலில் எடர்னிட்டி சி என்ற சரக்கு கப்பல் இஸ்ரேலில் உள்ள எய்லத் துறைமுகத்துக்கு சென்று கொண்டிருந்தது. அந்த கப்பலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவி ஹவுதி போராளிகள் தாக்கியுள்ளனர். இதில் கப்பல் மூழ்கியதில் அதில் பணிபுரிந்த ஊழியர்கள் 4 பேர் பலியாகினர். கப்பலில் மொத்தம் 25 ஊழியர்கள் இருந்தனர். அதில் இந்தியர் உட்பட 10 பேர் ஹவுதிகளால் மீட்கப்பட்டுள்ளனர். கப்பல் ஊழியர்களை ஹவுதிகள் கடத்தி வைத்துள்ள இடம் தெரியவில்லை. இதனிடையே கடத்தப்பட்ட கப்பல் ஊழியர்களை விடுவிக்க வேண்டும் என ஹவுதிகளுக்கு அமெரிக்க தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

## அகில....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

27ஆம் திகதி வரை 3 ஆயிரத்து 664 பரீட்சை மத்திய நிலையங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெற்றன.

3 இலட்சத்து 98 ஆயிரத்து 182 பரீட்சாத்திகள் பாடசாலை ஊடாகவும், 75 ஆயிரத்து 965 பரீட்சாத்திகள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்திருந்த 4 இலட்சத்து 74 ஆயிரத்து 147 பரீட்சாத்திகளில் 3 இலட்சத்து 75 ஆயிரத்து 244 பேர் பாடசாலை ஊடாகவும், 49 ஆயிரத்து 908 பேர் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதற்கமைய ஒட்டுமொத்தமாக 425 152 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 26 பரீட்சாத்திகள் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 73.45 சதவீதமாகும். 13 ஆயிரத்து 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இது 4.15 சதவீதமாகும்.

மேல் மாகாணத்தில் 74 சதவீதமானோரும், மத்திய மாகாணத்தில் 73 சதவீதமானோரும், தென் மாகாணத்தில் 75 சதவீதமானோரும், வடக்கு மாகாணத்தில் 69 சதவீதமானோரும், கிழக்கு மாகாணத்தில் 74 சதவீதமானோரும், வடமேல் மாகாணத்தில் 71 சதவீதமானோரும், வடமத்திய மாகாணத்தில் 70 சதவீதமானோரும், ஊவா மாகாணத்தில் 73 சதவீதமானோரும் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் 73 சதவீதமானோரும் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஆங்கிலப் பாடத்தில் 73 சதவீதமானோரும், விஞ்ஞான பாடத்தில் 72 சதவீதமானோரும், கணித பாடத்தில் 69 சதவீதமானோரும் சித்தியடைந்துள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பெறுபேறுகள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். 2 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுபேறுகளில் பாரியளவில் முன்னேற்றம் இல்லை.

இவ்வாண்டுக்கான ஜி.சீ.ஏ. உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

அதேவேளை, இந்த வருடத்துக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளை 2026 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இருந்து பரீட்சைகளை உரிய மாதங்களில் நடத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்." - என்றார்.

## மின் கம்பத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளிக்கிழமை பிற்பகல் மின் கம்பத்தில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் இணைந்து மின் கம்பத்தில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்ட நபரை மீட்டு கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி இளைஞர் எதற்காக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார் என்ற காரணத்தைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை.

## ராஜிதவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வழக்கு இன்று கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைகளைக் கருத்தில்கொண்ட நீதிவான், ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்த வருடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக பாணந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளகப் பொறிமுறைகள் ஊடகவே தீர்வை மேற்கொள்ள வேண்டும் எனும் கருத்தை தங்களது அறிக்கைகளிலும், ஊடக நேர்காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கான பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறையை கடந்து சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாக கிடைக்க வேண்டும் என்பதனை மீள வலியுறுத்தி எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய மக்கள் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளோம்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அனைவரின் பங்களிப்பை வழங்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்." - என்றுள்ளது.

# சுற்றுலா சென்ற நபர் நீரில் மூழ்கி மரணம்!

*பதுளை, ஜூலை 11*

*பதுளை - மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெலுவ வாவியில் நீராடிக்கொண்டிருந்த நபர் ஒருவர் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.*

*உயிரிழந்தவர் பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் ஆவார்.*

*மேற்படி நபர் நண்பர்களுடன் இணைந்து பண்டாரவளையில் இருந்து மஹியங்கனை நோக்கி சுற்றுலாவுக்குச் சென்றுள்ள நிலையில் நெலுவ வாவியில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*பின்னர் நண்பர்கள் அனைவரும் இணைந்து நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

*பாணந்துறை, ஜூலை 11*

*பாணந்துறை, ஹிரண பொலிஸ் பிரிவின் மாலமுல்ல பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அறையில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.*

*இனந்தெரியாத நபர் ஒருவர் வீட்டின் ஜன்னலை உடைத்து துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் மாலமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.*

*மேற்படி நபர் சிகிச்சைக்காகப் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் கண்டறியப்படாத நிலையில் சந்தேகநபர்களைக் கைது செய்ய 3 பொலிஸ் குழுக்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*மேலும், குடு சலிந்து மற்றும் நிலங்க இடையேயான மோதலில் குடு சலிந்துவின் தரப்பைச் சேர்ந்த ஒருவரை குறிவைத்து இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.*

# பிரித்தானியாவின் தீர்வை வரியின்றிய புதிய சீர்திருத்தம்– இலங்கைக்கு கிடைக்கும் நன்மை!

இலங்கை, நைஜீரியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களை தீர்வை வரியின்றி இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குவதாக பிரித்தானியாவின் வணிகம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்த புதிய வர்த்தக நடவடிக்கைகள் இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு பயனளிக்கும் எனவும், அவர்கள் சந்தையை எளிதாக அணுக முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆடைத் தொழில் ஏற்றுமதி வருமானம் முக்கியமாக உள்ளதுடன், இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்குகிறது.

இதற்கிடையில் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர வரியை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முடிவு செய்துள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே 88 சதவீத வர்த்தக பற்றாக்குறை காரணமாக இலங்கை மீது 44 சதவீத வரியை விதிப்பதாக கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி ஜனாதிபதி டிரம்ப் முதலில் அறிவித்த போதிலும், நேற்று இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில் ஜனாதிபதி டிரம்ப் அந்த எண்ணிக்கையை 30 சதவீதமாகக் குறைத்தார்.

இந்த கட்டண விகிதத்தை மேலும் குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக நேற்று விசேட ஊடக சந்திப்பில் உரையாற்றிய நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் தெரிவித்தனர்.

இருப்பினும், அமெரிக்காவால் புதிதாக விதிக்கப்பட்ட 30 சதவீத பரஸ்பர வரிக்கு கூடுதலாக, தற்போதுள்ள 10 சதவீத வரியும் சேர்க்கப்பட உள்ளது. இந்த வரிவிதிப்பு இலங்கையில் ஆடை உற்பத்தியாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் 25 வீதம் அமெரிக்காவிலிருந்து கிடைப்பதாகவும், நாட்டின் ஆடைப் பொருட்களில் 70 வீதம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கை மீது அமெரிக்கா விதித்த 40மூ வரி நாட்டின் ஏற்றுமதித் துறையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறை விரிவுரையாளர் உமேஷ் மொரமுதலி கருத்து தெரிவித்துள்ளார். அவர் தெரிவிக்கையில்,

ஆடைகளைப் பொறுத்தவரை, நாங்கள் வியட்நாம், பங்களாதேஷ் மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளுடன் போட்டியிடுகிறோம்.

இந்த நாடுகளில் ஊதிய நிலை இலங்கையின் விலைகளை விடக் குறைவாக உள்ளது. சில நேரங்களில், நமது விலை உயர்வை பங்களாதேஷ் உடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளை விட விலைக் குறைப்பின் சதவீதம் மிக அதிகமாக இருக்கும்.

இதனால்தான் இலங்கை தான் ஏற்றுமதி செய்யும் பொருட்களை பல்வகைப்படுத்த வேண்டும். ஏற்றுமதி செய்யும் நாடுகளையும் பல்வகைப்படுத்த வேண்டும்- எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் பிரித்தானியா வரியின்றி அந்நாட்டு சந்தைக்குள் நுழையும் வகையில் புதிய வர்த்தக நடவடிக்கைகளை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அருள் வந்து ஆடியவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

ஏறாவூர் களுவங்கேணி பிரதேசத்தில் பேச்சியம்மன் கோவிலில் இடம் பெற்ற வருடாந்த சடங்கின் போது தெய்வம் ஆடிய ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்ததுடன் ஒருவர் மீது தெய்வம் ஆடிய ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தியதை அடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை (10) இரவு 9.30 மணிக்கு இடம் பெற்றதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி சிங்காரதோப்பு கிராமத்தில் உள்ள பேச்சியம்மன் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் சடங்கு சம்பவ தினம் வியாழக்கிழமை (10) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது

இதன் போது பக்தர்கள் ஆலயத்தினுள் தெய்வம்ஆடிக் கொண்டிருந்தபோது 37 வயதுடைய நிமலன் என்பவர் திடீரென மயங்கி விழுந்ததை அடுத்து அவர் அங்கு உயிரிழந்தார்.

இதையடுத்து அங்கு தெய்வம் ஆடிக் கொண்டிருந்த ஒருவர் மீது இன்னொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்டவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2025 வெளியிடப்பெற்றது.